

தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கீழப்பாவூர் ஒன்றியம் குணராமநல்லூர் ஊராட்சி புல்லுக்காட்டுவலசை ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் பள்ளி துவக்க நாள் நிகழ்வு பள்ளி தலைமை ஆசிரியர் சிவகுமார் தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மருத.கலை கதிரவன் பங்கேற்று அரசு சார்பில் மாணவர்,மாணவியர்களுக்கு பாடப் புத்தகங்கள்,சீருடைகள், புத்தகப்பைகள் (பேக்) ஆகியவற்றை வழங்கி உரையாற்றினார்.நிகழ்வில் முன்னாள் ஒன்றிய அவைத் தலைவர் காசிமணி,மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார்,கிளைச் செயலாளர் மாரிமுத்து,ஊராட்சி மன்ற தலைவர் சுபாசக்தி உள்பட கழகத்தினர் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். மாணவிகளின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

### நெல்லையில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த

# நகரைச் சுற்றி வெளிவட்டச் சாலை அமைத்திடுக!

### மாவட்ட ஆட்சியருக்கு சு. சுப்பிரமணியன் மனு!

நெல்லை, ஜூன் 7-

நெல்லையில் சாலையை மேம்படுத்தக் கோரி மாவட்ட ஆட்சியரை சந்தித்து நெல்லை மேற்கு மாநகரப் பொறுப்பாளர் சு. சுப்பிரமணியன் மனு அளித்தார். அதன் விவரம் வருமாறு:-

நெல்லை மாநகர பகுதிகளில் போக்குவரத்து நெருக்கடி அதிகமாக இருப்பதால் பணிக்கு செல்லும் பொதுமக்கள் மற்றும் பள்ளிக்கு செல்லும் மாணவ மாணவிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் ஆகவே திருநெல்வேலி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட எஸ்.என் நெடுஞ்சாலை தெற்கு மற்றும் வடக்கு மவுண்ட் ரோடு பேட்டை பகுதிகளில் மற்றும் பழைய பேட்டை பகுதிகளில் செல்லும் சாலைகள் மிகவும் குறுகலாக மற்றும் போக்குவரத்து நெரிசல் மிகுந்ததாக காணப்படுகிறது.ஆகவே பெருகிவரும் வாகனங்களின் அடிப்படையில் புதிய கட்டமைப்புகளை அதாவது வெளி வட்ட சாலை சிட்டி அவுட்டர் ரிங் ரோடு ஏற்படுத்த வேண்டிய காலத்தில் உள்ளோம்.

1. எஸ். என். நெடுஞ் சாலையில் அமைந்துள்ள ஸ்ரீபுரம் பகுதியை மையமாகக் கொண்டு மேற்கு பகுதியில் ஊருடையான் குடியிருப்பு செல்லும் சாலையில் இருந்து நயினார் குளம் கரையில் அமைந்துள்ள சாலையை இணைப்பது.

2.மேற்படி ஸ்ரீபுரம் பகுதியில் கிழக்குப் பகுதியில் இருந்து மணிப்புரம் வழியாக நெல்லை கண்ணன் சாலையை இணைப்பது என மேற்படி இரண்டு சாலைகள் உருவாகும் பொழுது எஸ்என் நெடுஞ் சாலையில் போக்குவரத்து நெருக்கடி குறையும்.

3.நெல்லை கண்ணன் சாலை குறுக்குத்துறை சாலை வழியாக தென்பத்து பேட்டை ரூரல் மற்றும் நரசிங்கநல்லூர் ஆகிய கிராமங்களின் வழியாக புதிய நகர்ப்புற வெளிவட்ட சாலை அமைத்து சேரன்மகாதேவி சாலையுடன் இணைத்தால் டவுண் பேட்டை பகுதியில் போக்குவரத்து நெருக்கடி குறையும்.

4. மேற்படி நரசிங்கநல்லூர் கருங்காடு கோபாலசமுத்திரம் 100 அடி சாலையில் இணைப்பை ஏற்படுத்தினால் புதியதாய் நடைபெறும் சாலை இணைப்பின் வழியாக நாகர்கோவில் சாலைக்கு இணைப்பினை ஏற்படுத்தலாம் தற்போது பேட்டை நூல் பாலை சிட்கோ வழியாக தொழில் பூங்கா அமைக்கும் பணி தொடங்கி விட்டதால் மேற்படி சாலை தொழிற்சாலை தளத்தின் போக்குவரத்திற்கு மிகவும் உறுதுணையாக இருக்கும்.

5. பழைய பேட்டை அரசன் நகரில் இருந்து ராமையன்பட்டி கிராமத்தை இணைக்கும் வகையில் சாலை அமைத்தால் அதன் வழியாக மதுரை சாலையை இணைக்கலாம்.

இவ்வாறு அவர் மனுவில் கூறியுள்ளார்.

அப்போது நெல்லை மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அலிஃப் மீரான், இனியன்,நெல்லை மாநகர மாணவரணி அமைப்பாளர் வினோத் குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

### ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார் தலைமை! கீழப்பாவூர் ஒன்றிய தி.மு.க,சார்பில்

# பாவூர்சத்திரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

### மரு.கலை கதிரவன் - பொ.சிவபத்மநாதன் பங்கேற்பு!

தென்காசி.ஜூன் 7-

தென்காசி தெற்கு மாவட்டம் கீழப்பாவூர் ஒன்றியம் தி.மு.க. சார்பில் பாவூர்சத்திரத்தில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாள் விழா,வெகு சிறப்பாக ஏழை,எளிய மக்கள் பயன் பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடப்பட்டது. அதாவது அரசு பள்ளியில் 10 ம் வகுப்பு 12 ஆம் வகுப்பு தேர்வில் வெற்றி பெற்று முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவர், மாணவியர்கள் உள்பட 9 பேருக்கு பரிசும்,103 கிலோ லட்டு, 103 தாய்மார்களுக்கு சேலை, 103 ஏழை, எளிய மக்களுக்கு 5 கிலோ அரிசி பை,103 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை போன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன்,தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் ஆகியோர் பங்கேற்று வழங்கினர்.

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி,கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் ஆலோசனைப்படி முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா வெகு சிறப்பாக தமிழகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

தென்காசி தெற்கு மாவட்டத்தில் ஒன்றிய,நகர,பேரூர், பகுதிகளில் கழக நிர்வாகிகள் தொடர்ந்து கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியும்,ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் கொண்டாடி வருகின்றனர்.

அதன்படி தென்காசி தெற்கு மாவட்டம் கீழப்பாவூர் ஒன்றிய தி.மு.க சார்பில் பாவூர்சத்திரத்தில்

கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்வும், பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார் தலைமையில் தொழிலதிபர்கள் சேவியர் ராஜன், ஆர். கே.காளிதாஸ் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் அருணோதயம்,இளங்கோ,முன்னாள் துணை சேர்மன் சுதன் கேபி கால சாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர் சாக்ரடீஸ் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் பொ.சிவபத்மநாதன், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் ஆகியோர் பங்கேற்று கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்தும்,பொது மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் சிறப்பித்த னர்.

அதாவது 10,12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அரசு பள்ளியில் முதல் மூன்று இடங்கள் எடுத்த மாணவர், மாணவியர்கள் உள்பட 9 நபர்களை பாராட்டி பரிசு வழங்கப்பட்டது.103 கிலோ லட்டும்,103 ஏழை தாய்மார்களுக்கு சேலையும்,103 நபர்களுக்கு 5 கிலோ அரிசி பையும், 103 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை யும் வழங்கி வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.இதனால் ஏழை, எளிய மக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர்.

நிகழ்வில் மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார்,மாவட்ட பொறுப்புகுழு முன்னாள் உறுப்பினர் மேகநாதன்,மாவட்ட விவசாய அணி துணை தலைவர் செல்வம்,மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் சுப்பிரமணியன், மாவட்ட பிரதிநிதி வளர்மதி ராஜன், துரைப்பாண்டியன்,அன்பழகன்,கடையம் அட்மாசேர்மன் குணசீலன், ஒன்றிய கவுன்சிலர் சங்கர்,கவிஞர் செல்வவேல் மாயவநாதன் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் கள் ஹரி கிருஷ்ணன்,அசோக்,கழக வழக்கறிஞர் ஹரி கிருஷ்ணன், மகாராஜன்,விடியல் ஆர்த்தி ராஜபாண்டியன், சிவன் பாண்டியன் அருள் ராஜ்,வைத்திலிங்க,ராஜா, ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி பெரியார் திலீபன்,முன்னாள் மாணவர் அணி துணை அமைப்பாளர் அருள்ஜோஸ்,ஒயிட் ராஜா,ஆனந்த்,வினோத்,குருசிங், ஆல்வின் ராஜா,சின்ன முருகன், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் சிவராஜ் பாண்டியன், தனக்குமார்,காந்திராமன்,மாலினி செல்வராஜ், தொழிலதிபர் சந்திரசேகர்,தங்கபாண்டியன், பாண்டி ஆசாரி, சிவசக்தி,டேவிட்சன், ஊராட்சி உறுப்பினர் பொட்டுத்தாய், வெள்ளகால் ஊராட்சி மன்ற தலைவர் செல்வ சுந்தரி,ஒன்றிய கவுன்சிலர் சுரேஷ்,பவுல்ராஜ்,துரைபாண்டியன்,பொன்னுத்துரை, ராஜேந்திரன், மதி, வெள்ளைச்சாமி, மாரி,தாசன்,அருள் பாண்டியன், பூதத்தான்,விடியல் ஆர்த்தி மாவட்ட ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் மேசியா ஜெய் சிங், மாவட்ட சிறுபான்மையினர் அணி துணை அமைப்பாளர் எட்வின் ஜெயராஜ் ,நாகல்குளம் காசி பாண்டியன்,மணி,சின்ன முருகன், உள்பட 300 க்கும் மேற்பட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

நிறைவில் கிளை செயலாளர் பா.நடராஜன் நன்றி கூறினார்.

# எப்போது மணக்கும் கிண்டி இருக்கும் திசையில்?

## 'கணையாழி' தலையங்கம்!




"எத்திசையும் புகழ் மணக்க
இருந்த பெரும் தமிழணங்கே"
மனோன்மணீயம் சுந்தரனாரின்
தமிழ்த் தெய்வப் பாடல் வரிகள்!
முத்தமிழ் அறிஞர் கலைஞர்
முதல் தடவை
முதலமைச்சராக இருந்தபோது,
மார்ச் 1970இல்
திரைப்படத்துறை பரிசளிப்பு விழாவில்
அறிவித்த
தமிழ்த்தாய் வாழ்த்தின் பாடல் வரிகள்!
தமிழ்த் தெய்வத்தைத்
தாயாக மாற்றித்
தமிழ்த் தெய்வ வணக்கத்தைத்
தமிழ்த்தாய் வாழ்த்தாக அறிவித்தார்!
தமிழில் பாடிய மேடை
'தீட்டாயிடுத்து' என்றும்
கச்சேரிகளில் 'துக்கடா' என்றும்
சிலர் கருதியிருந்த
தமிழைத்
தெய்வம் என்றார் சுந்தரனார்.
தெய்வ நம்பிக்கை இல்லாதவர்களும்
கொண்டாடும் வகையில்
தாய் என்றார் கலைஞர்!
தாய்மொழி எதுவாக இருப்பினும்
தமிழ்த்தாயை வாழ்த்துங்கள் என்று,
தாய்மொழி வாழ்த்து என்றில்லாமல்
தமிழ்த்தாய் வாழ்த்து என்றார்
முத்தமிழ் அறிஞர்!
அப்போதும்
"தமிழ் தெய்வமில்லை;
குட்டித் தேவதை" என்றார்கள்!
'ஓம்', 'மந்திரம்',
ஒலி, மொழி தெய்வம் என்றவர்களே,
கடவுள் வாழ்த்துக்குப் பதில்
மொழி வாழ்த்தா? என்றார்கள்!
அப்போது
பாவேந்தருக்கும் உடன்பாடில்லை.
தாயுமானவர் பாடலையோ,
திருக்குறள் கடவுள் வாழ்த்தையோ
தமிழ்த்தாய் வாழ்த்தாக்கலாம் என்று
புலவர்குழு கூடத்
தீர்மானம் போட்டிருக்கிறது.
தாயுமானவர் பாடலில்
மதச்சார்பு இருக்கிறது.
திருக்குறள் கடவுள் வாழ்த்தில்
'தாள்', 'அடி' இருக்கின்றன.
எந்த மதச்சார்பும் இல்லாமல்
பொதுவாக இருக்கிறது
மனோன்மணீயப் பாடல் என்பதோடு,

மற்றவர்கள் மனம் வாடக் கூடாதென்று
"ஆரியம்போல் உலக வழக்கு
அழிந்து ஒழியா"
என்ற வரியையும்
வாழ்த்தில் வசை வேண்டாம் என்று
நீக்கச் செய்தவர் கலைஞர்!
"பிறப்பொக்கும்" எனத் தொடங்கும்
கலைஞர் அவர்களின்
செம்மொழி மாநாட்டுப் பாடல்,
செம்மொழி வாழ்த்துப் பாடலாக
உலகத் தமிழர்களிடம்
ஒலித்துக் கொண்டிருக்கிறது!
அப்போதும்
"நீச மொழி வாழ்த்திற்கு
மரியாதையா?" என,
தமிழ்த்தாய் வாழ்த்துக்கு
எழுந்து நிற்க
மனம் இல்லாதவர்களையும்
ஆணையிட்டு எழுந்து நிற்க வைத்தார்
மாண்புமிகு முன்னாள் முதல்வர்
மு.க. ஸ்டாலின் அவர்கள்!
திராவிட மொழிகளின் தாய் என்று
போற்றப்படும் தமிழ்
இப்போது
ஈழத் தமிழர்களால்
உலக மொழிகளின் தோழியாக
ஆகியிருக்கிறது!
ஆனால் தமிழ்நாட்டில்
முதலிடத்தில் இருந்த,
இருக்க வேண்டிய
தமிழ்த்தாய் வாழ்த்துக்கு
மூன்றாம் இடம்!
வந்தே மாதரம் பாடலுக்கு
முதலிடம்!
முதல் இரண்டு சரணங்கள்
சமஸ்கிருதச் சொற்கள்!

பின்வரும் பகுதி
வங்காள மொழியில்!
கேட்டால் சொல்கிறார்கள்,
"வந்தே மாதரம் தேசியப் பாடல்" என்று!
வந்தே மாதரம்
விடுதலைப் போராட்டக் காலத்து
தேசிய ஒற்றுமையின் அடையாளம் என்று
சொல்லியிருக்கிறார் பாரதியார்!
தாயை வணங்கும்
வந்தே மாதரம் சரியில்லை
வந்தே பிதரம் -
தந்தைய வணங்குகிறேன்.
தந்தை என்பது ஆங்கில அரசு என்று
கொச்சி சமஸ்தானத்தில்
திவான் பேஷ்கார் வேலை பார்த்த
எ. சங்கரய்யா என்பவர் அப்போதே
இந்தியா பத்திரிகைக்கு (8/6/1907)
கடிதம் எழுதியிருக்கிறார்.
1907இல் வந்தே மாதரம்
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
மொழிபெயர்த்தவர் பாரதியார்!
பாரதியார் இருமுறை
மொழிபெயர்த்திருக்கிறார்!
இந்தியா இதழில் (18.05.1907)
இராக, தாளக் குறிப்புகள் இல்லாமல்
வெளிவந்துள்ளது
முதல் மொழிபெயர்ப்பு!
'முன்னொருமுறை முழுதும் அகவலாக
ஓர் மொழிபெயர்ப்பு எழுதியிருந்தேன்;
ஆனால் அது
பாடுவதற்கு நயப்படாததாகையால்,
இப்போது பல சந்தங்கள் தழுவி
மொழிபெயர்க்கப்பட்டுள்ளது"
எனும் ஆசிரியர் குறிப்புடன்,
'ஜாதீய கீதம்' எனும் தலைப்பில்.
இந்தியா இதழில் (13.03.1909)
வெளிவந்துள்ளது
இரண்டாவது மொழிபெயர்ப்பு!
"ஆலயம் தோறும் அணிபெற விளங்கும்
தெய்வச் சிலையெலாம்
தேவி இங்குனதே"
என்றும்,
"பத்துப் படைகொள்ளும் பார்வதி தேவியும்,
கமல இதழ்களில்
களித்திடும் கமலையும்,
அறிவினை அருளும்
வாணியும் அன்னை நீ" என்றும்,
பாரதியின் மொழிபெயர்ப்பில்
இடம்பெற்றிருக்கின்றன!
(சீனி விவிசுவநாதன்,
காலவரிசையில் பாரதி படைப்புகள்)

ஒரு மதச்சார்பில்லா
அரசு நிகழ்ச்சிகளில்,
எந்த மதச்சார்பும் இல்லாத
தமிழ்த்தாய் வாழ்த்துக்கு
இப்போது மூன்றாவது இடம்!
அனைத்து உலகும் இன்பமுற,
எத்திசையும் புகழ் மணக்க
இருந்த பெரும்
தமிழணங்கின் புகழ்
எப்போது மணக்கும்
கிண்டி இருக்கும் திசையில்?



அன்புடன்
ம.ரா.

நன்றி: **கணையாழி**
ஜூன் 2026